**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகருக்கு விளையாட்டு தினம் மீண்டும் வருகிறது

***விளையாட்டுக்களை முயன்று பார்ப்பதற்கும், இந்த பருவத்தில் அதற்காக பதிவு செய்துகொள்வதற்கும் உதவிகரமாக இருக்க ப்ராம்ப்ட்டன் ஸ்போர்ட்ஸ் அல்லையன்ஸ் (Brampton Sport Alliance) அமைப்புடன் நகர நிர்வாகம் கை கோர்க்கிறது***

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 14, 2023) – எதிர்கால விளையாட்டு வீரர்களை அழைக்கிறோம்!

ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது வரும் பிப்ரவரி25, சனிக்கிழமையன்று ப்ராம்ப்ட்டன் ஸ்போர்ட்ஸ் அல்லையன்ஸ் (Brampton Sport Alliance) அமைப்புடன் இணைந்து விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு மீண்டும் உபசரிப்பு வழங்குகிறது; இது ஸேவ் மேக்ஸ் ஸ்போர்ட்ஸ் (Save Max Sports) மையத்தில் நிகழவிருக்கிறது.

இந்த துவக்க நிகழ்ச்சியானது, இளைஞர்கள் தங்களுக்கு எந்த விளையாட்டு பொருத்தமாக இருக்கும் என்று இனம் கண்டு, முயற்சி செய்து பார்க்க, ஸ்தலத்திலேயே அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தினை வழங்குகிறது. நிகழ்ச்சி தொடர்பான அணித்தலைவர்களுடன் பரஸ்பர செயல் புரிந்து, வரவிருக்கும் பருவத்திற்காக தங்களைப் பதிவு செய்துகொள்ள முடியும்.

ஏறத்தாழ ஒரு டஜன் விளையாட்டுக்குழுக்கள் கலந்துகொள்ளவிருக்கிறார்கள்; வஸந்தகால மற்றும் கோடைக்கால விளையாட்டுக்களாகிய பேஸ்பால், லாக்ரோஸ், ஸாக்கர் மற்றும் தடகள பங்கேற்புகள், ஹாக்கி, கால்பந்து, கூடைப்பந்து ஆகியவற்றுக்கு செய்முறை விளக்கம் அளிப்பார்கள். அனைத்து வயது மற்றும் திறன் கொண்டவர்கள் வரவேற்கப்படுகிறார்கள்

கலந்துகொள்பவர்களுக்கு ஒரு கடவுச்சீட்டு வழங்கப்படும் மற்றும் அவர்கள் முயற்சிக்கும் ஒவ்வொரு விளையாட்டுக்கும் முத்திரை அட்டைகள் (ஸ்டாம்ப்ஸ்) சேகரிக்க ஊக்குவிக்கப்படுவார்கள். மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட முத்திரை அட்டை (ஸ்டாம்ப்ஸ்) களைச் சேகரிப்பவர்கள் பரிசுகளை வெல்வதற்காக குலுக்கலில் நுழைவார்கள். ப்ராம்ப்ட்டனில் விளையாட்டு தினம் ஒரு இலவச சமூக நிகழ்வு மற்றும் பதிவுசெய்யத் தேவையில்லை

**இந்த தேதியை ஒதுக்கிக் கொள்ளுங்கள்**

ப்ராம்ப்ட்டனில் விளையாட்டு தினம்

சனிக்கிழமை, பிப்ரவரி 25, முற்பகல் 10 – பிற்பகல் 4 மணி வரை

Save Max Sports Centre

1495 Sandalwood Pkwy E

Brampton, ON

L6R 0K2

**அறிஞர் கூற்றுக்கள்**

“இது விளையாட்டு என சொல்வதை விட ஒரு பெரிய விஷயமாகும். ஒரு குழுவின் அங்கமாக இருப்பது, தாக்குப்பிடிக்கும் தன்மையை அதிகரிக்கிறது, அனைவரும் சொந்தம் என்ற உணர்வை உருவாக்குகிறது மற்றும் அத்தியாவசிய வாழ்க்கைத் திறன்களைக் கற்றுக்கொடுக்கிறது என்பதை நாங்கள் அறிவோம். அனைவருக்கும் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குவதில் இது மிகவும் முக்கியமானது; மேலும் புதிய வாய்ப்புகள் மற்றும் நண்பர்களுடன் சேரும்போது நீங்கள் ஒரு புதியதொரு, உங்களுக்குப் பிடித்தமான பொழுதுபோக்கைக் கண்டுகொள்வீர்கள் என்று நாங்கள் நம்புவதால், ப்ராம்ப்ட்டனில் நடக்கவிருக்கும் விளையாட்டு தினத்தில் முடிந்தவரை பலரைக் காண்பதை நாங்கள் எதிர்நோக்குகிறோம்.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“புதிய பேரார்வம் கொண்ட இளைஞர்களை ஒருவருக்கொருவர் இணைப்பது நமது நகரத்தின் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கு இன்றியமையாததாகும். வெற்றிக்கான வாய்ப்புகளை உருவாக்குவதில் நாங்கள் மிகவும் ஆர்வமாக உள்ளோம், மற்றும் இந்த நிகழ்வு அதைத்தான் வழங்குகிறது. இளைஞர்கள் கற்கவும் வளரவும் ஒரு பாதுகாப்பான இடத்தை இது வழங்கும் எனும் அதே வேளையில், சமூகத்தின் மீது ஒரு பற்றுணர்வு மற்றும் தொடர்பை உருவாக்குவது பற்றியதும் ஆகும்.”

*- ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள்1 மற்றும் 5, தலைவர், சமுதாய சேவைகள்*

“ப்ராம்ப்ட்டன் நகரமானது சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதற்காக பல்வேறு நிலைகளில் செயல்பாடுகளை வழங்க முயற்சிக்கிறது. நமது குடியிருப்பாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய பல விருப்பத்தெரிவுகளை நாங்கள் வழங்குகிறோம்; மேலும் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சமூகங்களை உருவாக்க விடாமுயற்சியுடன் செயல்படுகிறோம். தடைகள் இல்லாத, அனைவரையும் உள்ளடக்கிய சூழலை உருவாக்கியதற்காக எங்கள் குழுவிற்கு நன்றி. இது இளைஞர்கள் பங்கேற்கவும் பெரிய விஷயங்களில் ஒரு பகுதியாக இருக்கவும் அவர்களை ஊக்குவிக்கிறது.”

*- மார்லன் கால்லிடீன், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca